**பன்னல பிரதேச சபை**
**குருணாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுலை 10 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 10 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பன்னல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுதன் தொடர்பான நிலையான வைப்புக் களுக்கான வட்டி வருமானம் ரூபா. 163,804 இனால் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது. | வருடத்திற்கான வருமானங்களை சரியாக கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 இன் இறுதி நிதிக்கூற்றுகளின் மூலம் சீராக்கம் செய்கின்றேன். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டுக்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா. 40,000,000 என மதிப்பிடப்பட்டிருந்த போதும், ரூபா. 4,000,000 எனக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்ததை சீராக்கம் செய்யும் பொழுது ரூபா. 36,000,000இனை திறண்ட நிதியில் செலவு வைப்பதற்குப் பதிலாக வருடத்தின் வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அத் தொகை யினால் வருடத்திற்கான மேலதிகம் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளில் இணக்கம் செய்யப்படல் வேண்டும். | 2020 இன் இறுதி நிதிக்கூற்றுகளின் மூலம் சீராக்கம் செய்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் 03 கணக்கு மீதிகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையிலான மீதி மற்றும் அட்டவணை மீதி ஆகியவற்றுக்கிடையில் ரூபா. 923,073 வேறுபாடு காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் மீதி அட்டவணை மீதிகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும். | ஊழியர் கடன் வேறுபாடுகளுக்கான காரணங்களை இனங்கண்டு ரூபா. 218,255.95 இனால் வேறுபாட்டைக் குறைத்துக் கொள்ள முடிந்ததுடன், மீதமுள்ள வேறுபாடுகளை இனங்காண முடியாதிருந்தது. நிதிக் கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளுக்கிடையிலான வேறுபாடு நீண்டகாலமாக இருந்து வருகின்ற ஒன்றாகும் என்பதையும் குறிப்பிடுகிறேன். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்களும் பரிசோதிக்கப்படாதிருந்ததுடன், அட்டவணைகள் மற்றும் காணி கட்டிட பதிவேடுகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. | விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | இதுவரையில் இறுதிக் கணக்கு புதிவேடுகள் மற்றும் காணிகள் தொடர்பான பதிவேடுகளுக்கிடையிலான வேறுபாடுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 2020ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கிலும் மற்றும் அட்டவணையிலும் அக் காணிகளை உள்ளடக்கி சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும், நிலையான சொத்து (காணி) பதிவேுடுகளை நாளதுவரையாக்கல் செய்வதாகவும் குறிப்பிடுகிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 91,103,432 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 89,654,732 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| I | வீதவரியும் வரியும் | 14,747 | 14,359 | 13,232 | 3,043 | 10,254 | 9,820 | 8,277 | 2,245 |
| II | வாடகை | 25,836 | 23,929 | 24,577 | 2,148 | 22,546 | 23,237 | 21,842 | 2,267 |
| III | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,386 | 1,332 | 1,332 | - | 1,386 | 1,378 | 1,378 | - |
| IV | ஏனைய வருமானம் | 24,795 | 24,513 | 24,513 | - | 12,733 | 12,693 | 12,693 | - |
| | மொத்தம் | 66,764 | 64,135 | 63,655 | 5,192 | 46,919 | 47,129 | 44,191 | 4,512 |

குறிப்பு – 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 3,970,,617 முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானமாகும்.

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உப அலுவலகங்களின் 03 வருடங்களைத் தாண்டிய அறவிட முடியாதிருக்கின்ற வீத வரி ரூபா. 332,938 மற்றும் ஏக்கர் வரி ரூபா. 515,803 ஆகக் காணப்பட்டது. | பிரதேச சபைச் சட்டத்தின் பிரமாணங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் வீத வரி மற்றும் வரி அறவிடப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இந் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிய தருகின்றேன். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா. 2,148,906 ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 1,440,363 தொகை 2020 மே மாத இறுதி வரை அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஓப்பந்தத்தின் அடிப்படையில் நிலுவை வாடகை அறவிடப்படல் வேண்டும். | 2020 மே மாத இறுதியில் இந் நிலுவையில் ரூபா. 708,542 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை இவ்வருட இறுதிக்குள் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 03 உப அலுவலகங்களில் 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை காணப்பட்டு வருகின்ற நிலுவை ரூபா. 451,645 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட இந் நிலுவையில் 2019 திசம்பர் 31 ஆம் திகதி 2019 ஆம் ஆண்டின் நிலுவை உட்பட ரூபா. 2,224,896 தொகையை அறவிடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,876,123 ஆகவிருந்தது. | நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு இறுதியில் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா. 8,551,125 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளதுடன், தற்பொழுது அதை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா. 81,585,143 ஆகவிருந்தது. | முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை | குறித்த வருடத்தில் இத் தொகை கிடைக்காததன் காரணமாக கடந்த |

| | | |
|---|---|---|
| | எடுத்தல் வேண்டும். | வருடங்களின் தொகையும் இவ்வருடம் கிடைக்கும். அதேபோன்று 2018 மற்றும் 2019 வருடங்களுக்காக ரூபா. 91,585,134 தொகை குருனாகல் மற்றும் குளியாபிடிய பதிவாளர் அலுவலகங்களில் இருந்து கிடைக்க வேண்டியிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தானே கெதர வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 08 கடைகளிலிருந்து ரூபா. 4,636,771 தொகை மற்றும் வெடகெயாவ வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 02 கடைகளிலிருந்து ரூபா. 220,332 தொகையுமமன சாவிக் கொடுப்பனவு அறவிடப்படாமலிருந்தது. | ஓப்பந்தத்தின் அடிப்படையில் சாவிக் கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கந்தானே கெதர 05 ஆம் இலக்க கடைக்கு ரூபா. 166,660 செலுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மீதமுள்ள நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். வெடகெயாவ வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 02 கடைகளிலிருந்து எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | வெடகெயாவ வியாபாரக் கட்டிடத் தொகுதியின் கடைகளிலிருந்து ரூபா. 444,450 கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 03 மாதங்களைக் கடந்த நிலுவை காணப்படும் சந்தர்ப்பத்தில் கடைகளை மீளக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓப்பந்தத்தின் அடிப்படையில் நிலுவைக் கொடுப்பனவுகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெடகெயாவ வியாபாரக் கட்டிடத் தொகுதியின் கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகைத் தொகையில் இதுவரை ரூபா. 377,850 அறவிடப்பட்டுள்ளது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 36 வெற்றிடங்கள் காணப்பட்ட அதேவேளை அலுவலக தொழிலாளர் ஒருவர் மிகையாகக் காணப்பட்டார். | உரிய வெற்றிடத்தை நிரப்புவதற்கும் மிகையை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதெனவும் ஏனைய வெற்றிடங்களையும் முறையான அங்கீகாரத்தினைப் பெற்று பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடுகிறேன். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலையான சொத்து புதிவேடுகள் முறையாக தொடர்ச்சியாக பேணப்பாதிருந்ததுடன் உப அலுவலகங்களின் சொத்துக்கள் பிரதான அலுவலக சொத்து பதிவேடுகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | தற்பொழுது இறுதிக் கணக்குகளின் அட்டவணைகள் மற்றும் காணிகள் தொடர்பான பதிவேடுகள் ஆகியவற்றுக்கிடையிலான இணங்காமைகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கிலும் அட்டவணையிலும் அக் காணிகளை உட்படுத்தி சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் நிலையான சொத்து (காணி) பதிவேடுகளை காலதுவரையாக்கல் செய்வதாகவும் குறிப்பிடுகிறேன். |

### 3.3.2 பயன்பாடற்ற / குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இறக்குமதி செய்யப்பட்ட நிசான் ரக தீயணைக்கும் வாகனம் சபையின் பெயரில் பதிவு செய்தல் மற்றும் வேறும் | பயன்பாடற்ற சொத்துக்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை | அந்த வாகனத்தை சபையின் பெயரில் பதிவு செய்வதற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆக்கபூர்வமான விடயங்களுக்காகப் பயன்படுத்தாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | எடுக்கப்பட வேண்டும். | அனுப்பப்பட்டுள்ளதுடன் அதனை சபையின் பெயரில் பதிவு செய்வதற்காக அதன் நிறையைக் கணித்து மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிடுகிறேன். |
| (ஆ) | கந்தானே கெதர வியாபாரக் கட்டிடத் தொகுதிக்குச் சொந்தமான ஒரு கடையும் மற்றும் மாகந்துர வியாபாரக் கட்டிடத் தொகுதிக்குச் சொந்தமான ஒரு கடையும் 2020 மே 22 ஆம் வரையிலும் பயன்பாடற்றுக் காணப்பட்டன. | கடைகளிலிருந்து வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 10 ஆம் இலக்க கடைக்கான சாவிக் கொடுப்பனவு செலுத்தல் தாமதமடைந்ததன் காரணமாக அக் கொடுப்பனவை சபைக்குச் சொந்தமாக்கியதன் பின்னர் எதிர்காலத்தில் வேறொருவருக்கு வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 04 ஆம் இலக்க கடைக்கான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக வருமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் கைச்சாத்திட வராததன் காரணமாக வாடகை அறவிடப்படவில்லை. எதிர்காலத்தில் வேறொருவருக்கு வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 120 மயானங்களில் 16 மாத்திரம் கையேற்கப்பட்டிருந்தன. | கையேற்பதற்கும் சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 120 மயானங்களில் 16 மயானங்கள் கையேற்கப்பட்டுள்ளதுடன் அளவீடு செய்யப்பட்டுள்ள 58 மயானங்களை சபைக்கு கையளிக்குமாறு பன்னல பிரதேச செயலகத்திடம் வேண்டப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபை பயன்படுத்துகின்ற 18 காணிகள் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இக் கையேற்பினை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |